ஹொரண பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹொரண பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹொரண பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு,

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் தேறிய காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது எந்த ஒரு சான்றுதழும் இன்றிய சீராக்கமாக ரூபா 55,462,460 தொகையும், இருப்பு விநியோகித்தல் செலவினம் ரூபா 37,524,679 தொகையும் சீராக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய வட்டியான ரூபா 57,598,307 சீராக்கப்பட்டிருக்க வில்லை.	ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் உள்ளபடியான மீதிக்கு சமமாக இல்லாமையின் காரணமாக இந்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டின் போது காசுப்பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆண்டில் பணமாகக் கிடைத்த வட்டி மாத்திரம் நிதிய உட்பாய்ச்சலாக காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமல் ரூபா 6,295,662 ஆன பெற வேண்டிய வட்டியும் சீராக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் தேறிய காசுப் பாய்ச்சல் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது காசுப் பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்படும்.	மேற்படி

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2022 ஆம் ஆண்டின் இறுதியின் போது இயந்திரங்களுக்கான பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 3,096,026 இயந்திரப் பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக்களில் 04 விடயங்களின் பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு சரியாகக் கணிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 142,354 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 640,345 ஆன நிலையான சொத்துக்களில் 03 தொகுதிகளுக்கு உரிய சொத்து விடயங்கள் 31 இற்காக நடப்பாண்டின் பெறுமானத் தேய்வுக்காக சீராக்கங்கள் செய்யும் போது ரூபா 48,522 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(ஈ)	மீளாய்வாண்டிற்கு உரிய பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 6,295,662 பெற வேண்டிய வட்டி கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக நிலையான வைப்புக் கணக்கில் வரவு வைத்ததன் காரணமாக அப்	மேற்படி	மேற்படி

	பெறுமதியால் நிலையான வைப்பு கணக்கு அதிகரித்தும் பெற வேண்டிய வட்டிக் கணக்கு குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(உ)	விரிவான வருமானக் கூற்றில் மீளாய்வாண்டிற்கு உரிய ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற மூலதன செலவின மாணியம் ஆக ரூபா 88,274,464 காண்பிப்பதற்கு பதிலாக பணமாகக் கிடைத்த ரூபா 69,739,035 மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(ஊ)	மீளாய்வாண்டின் போது மொறகஹஹேன சுடலைக் கூடத்தின் நிர்மாணத்திற்காக ஹொரண பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 29,344,000 தொகையும் உள்ளடக்கி கூட்டுமொத்தமாக ரூபா 85,000,000 தொகை உரிய பணிகளை நிறைவேற்றாது இருக்கும் போது மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 02 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுமொத்தத்திற்கும் அவற்றுக்குரிய பட்டோலைகள் / பேரேட்டுக் கணக்களில் காணப்படுகின்ற மீதிகளின் கூட்டுத்தொகைக்கும் இடையே ரூபா 35,330 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாடுகளுக்கு உரிய காரணங்களைக் கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்			
(i)	134(1) ஆம் பிரிவு	2007 ஆம் ஆண்டின் போது ஹொரண பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தை	சேவை மற்றும் வசதிகள் வழங்கும் இயலுமையின்	பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம்

		அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்ட போதிலும் அதன் சகல பிரதேசங்களுக்காகவும் ஆதனவரி அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அடிப்படையில் மதிப்பீடு நடவடிக்கைகள் மேற்கொண்டு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	158(1) ஆம் பிரிவு	உரிமையாளர்களை இனங்காண முடியாத ஆதனங்கள் மற்றும் வெற்றுக் காணிகளாக இனங்காணப்பட்ட 320 ஆதனங்களில் இருந்து ஆதனவரி அறவிடப்படாது இருந்ததுடன் அது தொடர்பாக பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 யூலை 01 முதல் சட்ட ரீதியான நடவடிக்கைகளை பின்பற்றுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.	மேற்படி
(ஆ)	2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை	மனித வள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரித்து அந்த திட்டத்தில் பதவியணியில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட தரப்பினருக்கு வருடம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலத்திற்கு குறையாத பயிற்சி சந்தரப்பம் ஒன்று உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக அவ்வாறான மனித வளத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது .	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 95,494,459 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 117,136,358 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமான மான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்ப ட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	23,179,649	25,340,234	29,178,734	3,521,326	15,483,588	15,838,693	12,858,172	7,359,824
ii.	வாடகை	2,044,000	1,963,600	1,994,100	20,500	2,091,000	1,996,560	1,945,560	51,000
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,520,000	2,179,253	2,164,253	20,000	3,717,000	4,693,176	4,670,176	5,000
		26,743,649	29,483,087	33,337,087	3,561,826	21,291,588	22,528,429	19,473,908	7,415,824

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
வாடகை மீளாய்வாண்டின் இறுதி வரையில் வாடகையாளர் மரணமடைந்திருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்த பாதுக்க வீதி கடை இலக்கம் 17, 30 மற்றும் பாணந்துறை வீதி கடை இலக்கம் 21 இல் அவர்களின் குடும்பங்களினால் கடை நடாத்திச் செல்லப்படுவதுடன் கடை வாடகை உடன்படிக்கைக் காலமும் முடிவடைந்திருந்த போதும் சட்ட ரீதியாக கடையின் உரித்து கையளிப்பதற்கோ அல்லது மீண்டும் கேள்வி கோருவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கடைகளைக் கையளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	கடைகளின் உரித்தை சட்ட ரீதியாக கையளித்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை கேள்வி வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 357,188 தொகை 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான ஒப்பந்தம் மற்றும் நிறுவத்தி வைத்தல் வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 4,571,575 என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.	ஒப்பந்தம் மற்றும் நிறுத்தி வைத்தல் வைப்பு மீதிகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தீர்த்து வைக்கப்படாத வைப்பு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2021 ஏப்ரல் 01 ஆம் திகதி ரூபா 8,500,000 செலவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட கழிவுப் பொருள் எரிப்புக் கூடம், 2023 ஆம் ஆண்டின் போது உக்காத கழிவுப் பொருட்களை எரித்தல் தொடர்பாக ஆரம்பப் பரிசோதனை ஒன்று மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இந்த எரிப்புக் கூடத்தில் அதிக புகை வெளியேறியதன் காரணமாக தொடர்ந்தும் பயன்படுத்த முடியாததாக அறிவிக்கப்பட்டிருக்கும் போது அது தொடர்பாக சபை நடவடிக்கை எடுக்காமையினால் இந்த எரிப்பு கூடம் 2023 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் கணப்பட்டது.	இதில் எரிக்கும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	குறைபாடுகளை நிவர்த்தி செய்து எரிப்பு கூடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2016 பெப்ரவரி 29 ஆம் திகதி இலக்கம் 01/2016 என்ற மேல் மாகாண செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபை பயன்படுத்துகின்ற கெப் வண்டி சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	கெப் வண்டி ஹொரண பிரதேச சபைக்கு கையேற்குமாறும் மற்றும் விடுவிடுப்பு வருமான அனுமதிப் பத்திரம் வழங்குமாறும் பிரதம செயலகத்திடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.	கையேற்கப்படாத சொத்துக்கள் கையேற்கப்படல் வேண்டும்.

3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,950,000 ஆன மாவக் ஓய இயற்கை உணவகத்தின் கீழ் மாடியை நவீன மயப்படுத்தும் நிர்மாண நடவடிக்கைகள் 2024 மார்ச் 28 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் முறையான சாத்தியவள ஆய்வு இன்றி அந்த நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது தரை மாடி எந்த ஒரு பணிக்காகவும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.	மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத பகுதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபையில் இரண்டாம் மற்றும் ஆரம்ப நிலைகளில் உத்தியோகத்தர்களுக்கு இடையே 10 பதவிகளுக்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் எண்ணிக்கையின் பிரகாரம் 17 உத்தியோகத்தர்களின் வெற்றிடம் காணப்பட்டது.	உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	வெற்றிடமான ஊழியர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு உரிய 38 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும் அந்த உத்தியோகத்தரகள் அங்கீகரிக்கப்படவில்லை.	அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அங்கீகரித்துக் கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது.	அங்கீகரித்த பதவியணியினரை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட 08 நிகழ்ச்சித் திட்டங்களின் செயல் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கு குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது.	பௌதீக திட்டமிடல் மற்றும் வீதிகள் நிர்மானத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட செயல் முன்னேற்றம் 100 சதவீதம் ஆகும்.	வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டின் போது தயாரிக்கப்பட்ட உள்ளகக் கண்காய்வுத் திட்டத்தின் 34 செயற்பாடுகளின் கீழ் கணக்காய்வு நோக்கங்கள் குறிப்பிடப்பட்ட போதிலும் 08 பிரிவுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு ஒன்று திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் 21 பிரிவுகள் தொடர்பாக மாதாந்த மற்றும் காலாண்டு ரீதியில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் கணக்காய்வு அவதானிப்பில் உள்ளடக்கப்பட்ட அறிக்கைகள் முகாமைத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தொடர்ச்சியாக உள்ளளக் கணக்காய்வு ஐயவினாக்கள் சமர்ப்பிப்பதற்கும், பின்தொடர் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை பொதுச் சபைக்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 சுற்றாடல் பிரச்சனைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கழிவுப் பொருள் எரிப்புக் கூடம் நிர்மாணிக்கப்பட்ட வளவில் உக்காத கழிவுப் பொருட்கள் கணிசமான அளவு வகைப்படுத்தப்படாமல் ஒன்று சேர்க்கப்பட்டிருந்தமை 2024 நவம்பர் 07 ஆந் திகதிய பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இந்த கழிவுப் பொருட்களை கூறுகளாக்குவதற்கான வேலைத் திட்டமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	புதிய பெல் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளது.	உக்காத கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு முறையான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி ஒன்றை அடைந்து கொள்வதற்கான 17 நோக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதில் 03 நோக்கங்களை பூர்த்தி செய்தல் தொடர்பாக மாத்திரம் சபையால் நடப்பாண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் கீழ் திட்டமிடப்பட்ட 10 நிகழ்ச்சித் திட்டத்திற்கு இடையே ரூபா 80,500,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட 03 நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	செயற்திட்டங்கள் இரண்டை நிறைவேற்றுவதற்கு போதியளவான காலம் காணப்படாது இருந்ததுடன் கெங்கேரியரங்க மண்டபத்தை கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	நிலைபேறான அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.